# குன்றிலாடும்

ராகம்: ரேவகுப்தி தாளம்: ஆதி
இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வரன்

## பல்லவி

குன்றிலாடும் குமரா அழகிய
நீல வண்ணக்கோல மயிலேறி வாராயோ
எந்தன் முறையே கேளாயோ

## அனுபல்லவி

ஆறுமுக வேலவா ஆதரவளிப்பவா
ஐங்கர ஸோதர சம்பு குமாரா
சரவண பவகுஹ ஷண்முக நாதா

## சரணம்

ஈதுலகினிலே இடுக்கண் வருங்கால்
எங்கள் துணைவன் நீயன்றோ
மனப்பிணி நீக்கிடும் மறைகள் ஓதிடும்
மார்க பந்துவும் நீயன்றோ

தந்தைக்கு உபதேசம் செய்த குருபரா
கலியுக வரதா கௌரீ தனயா
வந்தருளாயோ வள்ளி மணாளா

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada